# யோனா

சர்வ ஜனத்திற்குமான தேவனின் அன்பு

# இந்தப் புத்தகத்தை ஆக்கியோன் குறித்து

- யோனா என்ற பெயரின் அர்த்தம் “புறா”
- இவன் இஸ்ரவேல் தேசத்தின் தொலைதூரத்தில் ஒரு மூலையில் உள்ள கலிலேயாவின் காத்தேபர் ஊரைச் சேர்ந்தவன். இந்தப்பகுதி செபுலோன் கோத்திரத்திற்குரியது.
- 2இரா14:25ல் இவன் 2வது யெரோபெயாம் ஆண்ட கிமு 785ம் ஆண்டுகளில் தீர்க்கதரிசனம் உரைத்தான் என்று சொல்லப்படுகிறது.
- ஆச்சாரமான யூதர்கள் பெரிய பாவநிவாரண நாளில் (யோம் கிப்பூர்) யோனாவின் புத்தகத்தை வாசிப்பார்கள்.
- இஸ்ரவேலுக்கான தீர்க்கதரிசனம் இதில் இல்லை.
- இதை எழுதின யோனாவுக்கு நேர்ந்த அனுபவத்தின் பதிவே இந்தப் புத்தகம்.
- இயேசு தமது ஊழியத்தின் காலத்தில் குறிப்பிட்ட எழுதப்பட்ட தீர்க்கதரிசி களில் யோனாவும் ஒருவன் (மற்றையவர்கள் -ஏசாயா, தானியேல், சகரியா)

    - அதிகாரங்கள் 4
    - வசனங்கள் 48

# யோனாவின் பின்னணி குறித்து

- அசீரிய இராஜ்யத்தின் தலைநகரான நினிவேயின் அக்கிரமங்களுக்கு எதிராக பிரசங்கம் செய்ய தேவன் யோனாவுக்கு கட்டளையிட்டார் (1:1-2). ஆனாலும் அவன் அதை செய்யாமல் கர்த்தருடைய சமூகத்திலிருந்து விலகி ஓடினான் (1:10).
- நினிவேக்கும் தர்ஷீசுக்கும்மான தூரம் மகா பெரியது. நினிவே டைகிரிஸ் நதியின் கிழக்கில் அமைந்துள்ள பட்டணம். தற்கால ஈராக்.
- யோனாவின் சொந்த ஊரிலிருந்து 500 மைல்கள் கிழக்கில் இருந்தது நினிவே.
- தர்ஷீசோ காத்தேபரிலிருந்து மேற்காக இருந்தது. தர்ஷீஸ் இஸ்ரவேலுக்கு 2500 மைல்கள் தொலைவில் நினிவேக்கு எதிர்திசையில் இருந்தது. யோனாவுக்கு இருந்த தொலைக்கோடியான இடமாயிருந்தது.
- யோனா தனக்கும் அசீரியாகளுக்குமிடையில் மிக அதிக தூரமிருக்க விரும்பினான்.

அசீரியர்கள் கொடுமையானவர்கள்

- அவர்கள் கைதிகளை சித்திரவதை செய்வதற்கு பேர்போனவர்கள். அவர்கள் எதிரி ஒருவனை பிடித்தால் அவனை பாலைவனத்தின் மணலில் அவனது கழுத்துவரை புதைத்து தோலினால் செய்யப்பட்ட வாரினால் அவனது நாக்கை இழுத்து வெளியேவிட்டு எச்சில்கூட விழுங்காதபடி செய்து பாலைவன வெய்யிலில் சாகும்படி விட்டுவிடுவார்கள்.
- அசீரியர்கள் படையெடுக்கும்போது படைவீரர்களின் குடும்பங்களும் அவர்களோடு செல்லும். அவர்கள் ஒரு நகரத்தில் இறங்கும்போது வெட்டுக்கிளிகள் மூடியதுபோல இருக்கும். அவர்களது கொடுங்கையில் விழுவதைப் பார்க்கிலும் தற்கொலை செய்துகொண்டு சாவது மேல் என்று நகரங்கள் பல அவ்வாறு செய்துகொண்டதாக வரலாறு கூறுகிறது.
- அசீரியர்கள் இஸ்ரவேல் மீது பலமுறை தாக்குதல் நடத்தியிருந்ததால் யோனா அவர்களின் கொடுமைசெயல்களை கண்களால் நேரடியாக பார்த்திருக்ககூடும்.

# யோனாவில் காணப்படும் 6 புதிய ஏற்பாட்டு படிப்பினைகள்

1. உயிர்த்தெழுதல்

- உயிர்த்தெழுதலை இந்த பழைய ஏற்பாட்டு புத்தகம் முன்மொழிகிறது.
- பொல்லாத விபசாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடினபோது இயேசு அவர்களுக்கான பதிலில் யோனாவின் புத்தகத்தின் நிகழ்வை குறிப்பிடுகிறார்.(மத் 12:38-40)

2. இரட்சிப்பு கிரியைகளினால் வருவதல்ல

- இரட்சிப்பு விசுவாசத்தால் வருகிறது, அது மனந்வருந்துதலுக்கு நேராய் நடத்துகிறது.
- மிக முக்கியமான அறிக்கை 2:9ல் உள்ளது. "இரட்சிப்பு கர்த்தருடையது"

3. தேவனின் கிருபைனக்கான நோக்கம் விரக்திக்குரியதல்ல

- இந்தப் புத்தகம் தேவனுடைய இரட்சிப்பின் செய்தியை கேட்டு அதை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு அதை அறிவிக்கிற அவருடைய உறுதியான தீர்மானத்தை காண்பிக்கிறது.

# யோனாவில் காணப்படும் 6 புதிய ஏற்பாட்டு படிப்பினைகள்

4. உண்மையில்லாமல் இருத்தலை தேவன் விட்டுவிடுகிறவரல்ல.

- தேவன் சொன்னதை யோனா முதல் முறை செய்யாதபோது, தேவன் அவன் வேண்டாம் என்று விட்டுவிடவில்லை.
- 3:1ல் இரண்டாந்தரம் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு உண்டாகி, என்பது ஊக்கமளிக்ககூடிய வசனம்.

5. கர்த்தர் நல்லவரும் கிருபையுள்ளவருமாய் இருக்கிறார் (4:2)

- பழைய ஏற்பாடு தேவனின் கோபக்கினையையும், புதிய ஏற்பாடு அவரது அன்பையும் வெளிப்படுத்துகிறது என்ற சொல்லுவது முற்றிலும் தவறானது.

6. தேவன் புறஜாதியாருக்கும் தேவனாயிருக்கிறார்

- ரோமர் 3:29ம் வசனம் இந்த புத்தகத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது. தேவன் யூதருக்குமாத்திரமா தேவன்? புறஜாதிகளுக்கும் தேவனல்லவா? ஆம் புறஜாதிகளுக்கும் அவர் தேவன்தான்.
- யோனாவின் புத்தகம் நற்செய்திப்பணிக்கான சிறந்த புத்தகம். அது உலக தரிசனத்தை கொண்டிருக்கிறது.

# யோனாவின் புத்தகத்தின் முக்கிய பகுதிகள்

**யோனா அழைக்கப்பட்ட பணிக்கு செல்லாமல் விலகியோடுதல் அதி1-2**

- யோனாவுக்கு கொடுக்கப்பட்ட பணி அவனது தப்பித்தல் 1:1-3
- ஆபத்தில் அகப்பட்ட மாலுமிகள் அவர்கள் தெய்வங்களை நோக்கி கதறுதல் 1:4-6
- யோனாவின் கீழ்ப்படியாமை வெளிச்சத்திற்கு வருதல் 1:7-10
- யோனா தண்டிக்கப்படுதலும் விடுவிக்கப்படுதலும் 1:11-2:1,2:10
- யோனாவின் நன்றி சொல்லும் ஜெபம் 2:2-9

**யோனா விருப்பின்றி கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றுதல் அதி 3-4**

- யோனாவுக்கு மீண்டும் கொடுக்கப்பட்ட பணி 3:1-4
- ஆபத்தில் அகப்பட்ட நினிவே மக்கள் மனந்திரும்பி கர்த்தரிடத்தில் விண்ணப்பித்தல் 3:5-9
- நினிவே மக்கள் மனந்திரும்புதல் ஏற்றுக்கொள்ப்பட்டது 3:10-4:4
- யோனாவின் கோபமும் தேவனின் கடிந்துகொள்ளுதலும் 4:5-11